**ஊனமுற்றோருக்கான தேசிய மன்றம் - 2016**

----------------------------------------------------------------------------

ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும், ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 18(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னாள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து ஊனமுற்றோருக்கான தேசிய மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் வீடமைப்பு உதவிகளை வழங்குதல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்காக பிரதேச செயலகத்திற்கு ரூபா 49,845,980 தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அதனை முற்பணமாகக் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றின் திரண்ட நிதியத்தில் ரூபா 28,075,848 தொகையான ஆரம்ப மீதி ரூபா 25,452,448 ஆகக் காண்பிக்கப்பட்ட காரணத்தால் ரூபா 2,623,400 இனால் திரண்ட நிதியமும், மீளாய்வாண்டின் தேறிய பற்றாக்குறை ரூபா 8,540,930 ஆக இருந்தும் நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 5,917,530 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக ஆண்டின் பற்றாக்குறையும் ரூபா 2,623,400 இனால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 8,540,930 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 19,449,936 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 27,990,866 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. செயற்பாட்டு செலவினம் ரூபா 33,569,469 இனால் அதிகரித்தமை மேற்படி வீழ்ச்சிக்கு பிரதான காரணமாக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1996 இன் 28 ஆம் இலக்க ஊனமுற்றோருக்கான உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட 22 நோக்கங்களுக்கிடையே பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அங்கவீனர்களுக்காக வழங்கப்படக்கூடிய சேவைகள் தொடர்பாக சரியான புள்ளிவிபரங்களைப் பேணிச் செல்லல், ஊனமுற்றதற்கான பிரதான காரணங்களைக் கண்டறிதலும் அவற்றைத் தவிர்த்தலும் மற்றும் அவற்றைக் கட்டுப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான படிமுறைகளை மேம்படுத்துதல் ஊனமுற்றோருக்கு தங்குமிட வசதிகளை வழங்கி கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளை வழங்குதல் மற்றும் அவர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களை ஆரம்பித்து பேணிச்செல்லல் போன்ற செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 04 செயற்பணிகளை நிறைவேற்றுவதிலான செயன்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

#### (அ) ஊனமுற்ற மாணவர்களுக்காக கல்விசார் உதவி வழங்கல்

மீளாய்வாண்டின் போது 400 ஊனமுற்ற மாணவர்களுக்கு உதவிகள் வழங்குவதற்கு ரூபா 3,000,000 நிதியேற்பாடு கிடைத்திருந்ததுடன் 377 ஊனமுற்ற மாணவர்களுக்காக உதவிகள் வழங்குவதற்காக ரூபா 3,132,382 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(i) கல்விசார் உதவிகளை வழங்குவதற்காக இலங்கையில் இருக்கின்ற ஊனமுற்ற சிறார்களின் எண்ணிக்கை சரியாக இனங்காணப்படாதிருந்ததுடன் 25 மாவட்டங்களில் முல்லைத்தீவு, நுவரெலியா மற்றும் திருகோணமலை போன்ற மூன்று மாவட்டங்களில் எந்தவொரு ஊனமுற்ற சிறார்களுக்கும் கல்விசார் உதவிகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டில் 377 ஊனமுற்ற மாணவர்களுக்கு கல்விசார் உதவிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், அதில் 332 மாணவர்களுக்கு அந்த உதவிகள், உரிய பிரகாரம் நலன் பெறுனர்களுக்கு வழங்கப்பட்டமையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான பின்தொடர் அறிக்கைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்ட சில விண்ணப்பங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் காரணமாக அவைகள் நிராகரிக்கப்படுவதுடன் அந்த விண்ணப்பங்கள் தொடர்பாக மீண்டும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### (ஆ) வைத்திய உதவிகளை வழங்குதல்

மீளாய்வாண்டின் போது 300 ஊனமுற்றோர்களுக்காக வைத்திய உதவிகளை வழங்குவதற்கு ரூபா 6,000,000 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வைத்திய உதவியாக 405 ஊனமுற்ற நோயாளிகளுக்காக ரூபா 6,029,310 தொகை செலவிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வைத்திய உதவிகளைக் கோருகின்ற நலன்பெறுனர்களின் தகவல்களை உள்ளடக்கிய தரவு முறைமையொன்று நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது வைத்திய உதவிகளை பெற்ற நலன்பெறுனர்களின் எண்ணிக்கை 405 ஆக இருந்த போதிலும், 374 நலன் பெறுனர்களிடமிருந்து அந்த நலன்கள் பெறப்பட்டமை உறுதிப்படுத்தப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(இ) ஊனமுற்றோர்களுக்காக வீடமைப்பு உதவிகளை வழங்குதல்**

குறைந்த வருமானம் பெறும் வீடற்ற ஊனமுற்றோருக்காக வீடமைப்பு உதவிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தில் தேசிய லொத்தர் சபையின் சுபிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்தில் மீளாய்வாண்டின் போது ரூபா 33,793,090 தொகை கிடைத்திருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை ஊனமுற்றோருக்கு வீடுகளை நிர்மாணிப்பதற்கு தவணைப் பணமாக நிதி கிடைத்திருந்த போதிலும் மீளாய்வாண்டு வரையில் முழுமையாக நிர்மாணிக்கப்பட்ட மொத்த வீடுகளின் எண்ணிக்கை எவ்வளவு என இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் போது ஊனமுற்றோருக்கு 534 தவணைகளில் செலுத்துவதற்காக 165 பிரதேச செயலகங்களுக்கு ரூபா 49,845,980 தொகை வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் வழங்கப்பட்ட தொகையில் 2007 முதல் 2015 ஆம் அண்டு வரையான காலப்பகுதியில் நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளுக்காக 226 தவணைகளுக்காக ரூபா 21,575,000 தொகையும், மீளாய்வாண்டில் புதிதாக நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட வீடுகளுக்காக 116 தவணைகளுக்காக ரூபா 17,825,000 தொகையுமாக 342 தவணைகளுக்காக கூட்டுத்மொத்தமாக ரூபா 39,400,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 10,445,980 தொகையான வீடுகளை நிர்மாணிப்பதற்காக பகிர்ந்தளிக்கப்படாமல் பிரதேச செயலகங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கைகளும் மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) வீடமைப்பு உதவிகளை வழங்கும் போது உரிய திட்டமொன்று பின்பற்றப்படாமையினால் வீடமைப்பு உதவி வழங்குதல் ஆரம்பிக்கப்பட்ட 2007 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை 22 மாவட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற 329 வீடுகளுக்காக மேலும் ரூபா 3,580,402 தொகை வழங்க வேண்டியிருந்தது.

(iv) முன்னைய ஆண்டின் போது வீடமைப்பு உதவிகளை வழங்குவதற்காக பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்ட தொகையில் மீண்டும் மன்றத்திற்கு ரூபா 4,311,271 மீளாய்வாண்டின் போது மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்தை மீண்டும் வீடமைப்பு உதவியாக வழங்குவற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(v) ஊனமுற்றோர் மன்றத்திடம் வீடமைப்பு உதவிகளைக் கோரியிருந்ததுடன் அதன் போது வருடாந்தம் கணிசமான எண்ணிக்கையில் விண்ணப்பங்கள் கிடைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அவை கிடைக்கப்பெறுகின்ற ஒழுங்கு முறையில் ஆவணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. சில வீடமைப்பு உதவி விண்ணப்பங்கள் கிடைத்து வருடமொன்றிற்கு மேற்பட்ட காலம் மன்றத்தில் தாமதித்து வைக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மற்றும் வீடமைப்பு உதவிகளை வழங்கும் போது கணிசமான காலதாமதத்துடன் காணப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

**(ஈ) வருமானத்தை உழைப்பதற்காக சுய தொழில்வாய்ப்பு உதவிகளை வழங்குதல்**

ஊனமுற்றவர்களில் காணப்படுகின்ற குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பொருளாதார நிலையை வலுப்படுத்துவதற்காக சுயதொழில் வாய்ப்புக்களை ஆரம்பிப்பதற்கு அல்லது அபிவிருத்தி செய்வதற்கு 500 நபர்களுக்கு வழங்குவதற்கு ரூபா 9,300,000 தொகையான நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 386 ஊனமுற்றோர்களுக்கு ரூபா 9,298,904 தொகை வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக நேரடி மேற்பார்வையொன்றை மேற்கொண்டு செயல்முன்னேற்ற அறிக்கையை மன்றத்திற்கு அனுப்புமாறு பிரதேச செயலாளருக்கு மன்றத்தால் எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 பதவியணியினர் நிர்வாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 26 ஆக இருந்த போதிலும், தற்போது உள்ளபடியாக 15 பேர் மாத்திரம் சேவையில் ஈடபட்டிருக்கின்றமையால் 11 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. அந்த வெற்றிடங்களுக்கான ஆட்சேர்த்தல் மந்த நிலையில் காணப்பட்டது. அவ்வாறு காணப்படுகின்ற பதவியணியினரில் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட செயற்பொறுப்புக்களை நிறைவேற்றுதலும் மந்த நிலையில் காணப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மன்றத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான பாதீடொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் வரிசை அமைச்சின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கில் விடுவிக்கப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்ட நிதியை மாத்திரம் பயன்படுத்துதல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதனால் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீடொன்றைத் தயாரிப்பது தொடர்பில் மன்றம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது தேறிய மன்றத்தின் தலைவரினது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

| | **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | **அவதானிப்புகள்** |
|---|---|---|
| | ------------------------------------------------ | ----------------------------- |
| (அ) | கணக்கீடு | உதவுதொகைகளை முறைப்படி கணக்கீடு செய்யாமை. |
| (ஆ) | பதவியணியினர் நிர்வாகம் | பதவியணியின் வெற்றிடங்களை நிரப்பாமையினால் தேசிய சபையின் இலக்கிடப்பட்ட செயலாற்றலை பூரணப்படுத்துவதற்கு தடையாக இருந்தமை |
| (இ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | ஊனமுற்றோருக்கு உரிய பிரகாரம் உதவிகள் கிடைக்காமை மற்றும் அது தொடர்பாக உரிய மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்படாமை. |